# பத்திரிக்கை செய்தி

## UDR பெயர் திருத்தம் மற்றும் கூட்டு பட்டா வழங்குவதற்கு லஞ்சம் பெற்ற பெரம்பலூர் மாவட்ட, வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் தனது நிலத்திற்கு UDR பெயர் திருத்தம் மற்றும் கூட்டு பட்டா வழங்குவதற்காக பெரம்பலூர் மாவட்டம், குலக்கநாதம் பிர்கா, தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை மேல் நடவடிக்கை செய்து பரிந்துரைப்பதற்காக திருமதி.இந்திராணி, வருவாய் ஆய்வாளர், குலக்கநாதம் பிர்கா, பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.20,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை பெரம்பலூர் பிரிவில் புகார் மனு ஒன்று கொடுத்துள்ளார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 09.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.இந்திராணி, வருவாய் ஆய்வாளர், குலக்கநாதம் பிர்கா, பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் லஞ்ச பணமான ரூ.20,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.